பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 07 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u> -

1. பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை இந்தியா எதிர்க்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியை நாட்டு நலனுக்காக பயன்படுத்த வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. உத்தராகண்ட் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி இன்று விமானம் மூலம் பார்வையிட்டார்.

3. இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் 12-வது பாதுகாப்பு ஒத்துழைப்பு குழுக் கூட்டம் இன்று அபுதாபியில் நிறைவடைந்தது.

4. இந்தியா-வுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டிவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை இந்தியா எதிர்ப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மாஸ்கோவில் இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் பேசிய அவர், கடந்த ஐந்து ஆண்டுகளில் உலகம் பல்வேறு சவால்களை சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

கோவிட் பெருந்தொற்றினால் ஏராளமான மக்கள் உயிரிழந்ததோடு, கடுமையான பொருளாதார சவால்களையும் ஒட்டுமொத்த உலகமும் சந்திக்க நேர்ந்ததாக அவர் கூறினார்.

இந்தியா – ரஷ்யா ஒத்துழைப்பு காரணமாக இந்திய விவசாயிகளும், நுகர்வோரும் இந்த இக்கட்டான தருணத்திலும் சமாளிக்க முடிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டபோதும் ரஷ்யாவின் உதவியால் இந்தியாவுக்குத் தேவையான பெட்ரோலும், டீசலும் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா – ரஷ்யா இடையேயான எரிபொருள் ஒப்பந்தம் சர்வதேச சந்தை நிலையாக இருப்பதற்கு பெரிதும் உதவியதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வரும் ஆண்டுகளிலும் இந்தியா – ரஷ்யா இடையேயான உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று பிரதமர் கூறினார்.

இந்தி சந்திப்புக்குப் பின்னர் பிரதமர் திரு நரேந்திரமோடியும், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினும் ரஷ்ய கண்காட்சி மையத்திற்கு இணைந்து சென்று பார்வையிட்டனர்.

இந்தியா – ரஷ்யா சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு குறித்த புகைப்படங்களையும், ரஷ்ய ஒத்துழைப்புடன் கூடங்குளத்தில் செயல்பட்டு வரும் அணுமின் சக்தி திட்டம் தொடர்பான படங்களையும் இருவரும் பார்வையிட்டனர்.

இந்திய – ரஷ்ய மாணவர்களிடையேயும் பிரதமர் கலந்துரையாடினார்.

அறிவியல் தொழில்நுட்பத்தை எதிர்கால சந்ததியினருக்கும், பூகோளத்தின் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் மேம்படுத்தும் பொறுப்பு மாணவர்களுக்கு உள்ளதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

முன்னதாக ரஷ்யாவில் உள்ள போர் நினைவிடத்திற்குச் சென்று இரண்டாம் உலகப்போரில் வீரமரணமடைந்த சோவியத் வீரர்களுக்கு திரு நரேந்திரமோடி வீர வணக்கம் செலுத்தினார்.

[]<<<>>>[]

மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியை மக்களுக்காகவும், நாட்டு நலனுக்காவும் பயன்படுத்த வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 13-வது பட்டமளிப்பு விழாவில் பட்டங்களை வழங்கி பேசிய அவர், தாங்கள் கற்ற கல்வியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதால் அறிவாற்றல் மேம்படும் என்று கூறினார்.

எதிர்காலத்தில் மாணவர்கள் பணி புரியும் துறைகளில் சிறப்பான பங்களிப்பை செலுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர் சி வி ராமன் சிறந்த அறிவியல் விஞ்ஞானியாகவும், கணித வல்லுநராகவும் திகழ்ந்தார் என்று கூறிய குடியரசுத் தலைவர், அவரை முன் மாதிரியாகக் கொண்டு சிறப்பான செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அறிவியலையும், தொழில்நுட்பத்தையும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கு உயர்ந்த சிந்தனையுடன் மாணவர்கள் திகழ வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

அறிவியல் தொழில்நுட்பத்தை எந்த வகையிலும் மனித குலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தக்கூடாது என்பதில் உறுதியுடன் இருக்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

நான்கு நாள் பயணமாக ஒடிஸாவில் பயணம் மேற்கொண்ட திருமதி திளெபதி முர்மு, இன்று புதுதில்லி திரும்புகிறார்.

[]<<<>>>[]

நாட்டில் ஒருங்கிணைந்த கல்வி கட்டமைப்பை உருவாக்குவதற்கு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்முன்வர வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு திட்டம் தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த பள்ளிக் கல்வி மேம்பாட்டுக்கான செயல் திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு திட்டத்தை கல்வித் துறையில் நிறைவேற்ற அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அறிவாற்றலில் வலிமைமிக்க நாடாக இந்தியாவை உருவாக்க அனைத்து மாநிலங்களும் தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

தரமான கல்வியை இந்த கொள்கை உறுதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரும் தங்களது தாய் மொழியில் கல்வி கற்பதற்கு தேசிய கல்விக் கொள்கை வழி வகுத்திருப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

**[]<<<>>>[]**

உத்தராகண்ட் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட **Kumaon** பகுதியை அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி இன்று விமானம் மூலம் பார்வையிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பெய்து வரும் கனமழை காரணமாக உதம்சிங்நகர், சம்பாவத் மாவட்டங்களில் பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட மக்கள் மீட்புப்படையினரால் மீட்கப்பட்டு சித்தார்கஞ்ச், உதம்சிங்நகர் உள்ளிட்ட பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 150 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் சம்பாவத் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் ஆறு லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் 120 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மற்ற மக்களுக்கும் தொடர்ந்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே உத்தராகண்ட் மாநிலத்தின் சில இடங்களில் மிக கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சிக்கிம் மாநிலம் **Mintokgang** த-யில் நடைபெற்று வரும் ஒருவாரகால ‘அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம்’ இயக்கத்தில் அம்மாநில முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங்கும், அவரது தயார் திருமதி தன்மயா தமாங்கும் கலந்து கொண்டனர்.

திரு பிரேம்சிங் தமாங் தனது அன்னையின் பெயரில் மரம் நட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நாடு முழுவதும் 140 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை இந்த இயக்கத்தின் கீழ் நடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

[]<<<>>>[]

தமிழகத்தில் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள் மூலம் மண்வளம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த பரிசோதனையின் மூலம் விவசாய நிலத்தின் தன்மை பரிசோதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்படுவதாக மாவட்ட வேளாண் அலுவலர் திரு. சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளைனயும் மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது.

[]<<<>>>[]

ஹரியான மாநில பிஜேபி தலைவராக திரு மோகன்லால் படோலி நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா, திரு படோலியை நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அவர் தற்போது ராய் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினராக உள்ளார்.

[]<<<>>>[]

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் 12-வது பாதுகாப்பு ஒத்துழைப்பு குழுக் கூட்டம் இன்று அபுதாபியில் நிறைவடைந்தது.

இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் இக்கூட்டத்தில் இரு நாடுகளும் பரிமாறிக் கொண்டன.

இந்திய குழுவுக்கு தலைமை வகித்த மத்திய இணைச் செயலர் திரு அமிதாப் பிரசாத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குழுவினருடன் ஆலோசனை நடத்தினார்.

அந்நாட்டின் பாதுகாப்புத் துறையின் மூத்த அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் ஜமால் இப்ராஹிம் முகமது, அந்நாட்டு குழுவுக்கு தலைமையேற்றார்.

இருதரப்பு பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தைகளும் விரிவாக நடைபெற்றன.

[]<<<>>>[]

இந்தியா-வுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டிவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

சென்னையில் சற்று முன் தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் தென்னாப்பிரிக்கா முதல் போட்டியில் வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது. மழைக் காரணமாக இரண்டாவது போட்டி கைவிடப்பட்டது.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரிஷி ரெட்டி – **Dhakshineswar Suresh** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட்கணக்கில் நியூஸிலாந்தின் **Ajeet Rai – James Watt** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித் நாகல் காலிதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மதுரை அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

சேலத்தில் இப்போட்டி சற்று முன் தொடங்கியது.

***End of News***